# அத்தாட்சிப்படுத்திய விதைநெல் உற்பத்தி



விவசாயத் திணைக்களத்தின் பிரசுரம்

# அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தி


விடய ஆலோசனைக்குழு
கலாநிதி எஸ்.எல்.வீரசேன
டபிள்யு.பீ.மதவன் ஆரச்சி

ஆக்கம்
சீரங்கன் பெரியசாமி



தயாரிப்பு
கட்புல, செவிப்புல நிலையம்

சித்திரம்
ஹேமாலி ராஜகுரு

கணனி வடிவமைப்பு
யோ.கு.கிருபைநாதன்

வெளியீடு
பணிப்பாளர்
விரிவாக்கமும், பயிற்சியும்
த.பெ.இல.18
விவசாயத் திணைக்களம்
பேராதனை

அச்சுப்பதிப்பு
விவசாய அச்சகம்
கண்ணோறுவை

விவசாயத் திணைக்களம்
பேராதனை

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வர்க்கத்தைத் தெரிவு செய்தல் | ..... | 1 |
| பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்தல் | ..... | 1 |
| பயிர்ச்செய்கையை ஆரம்பித்தல் | ..... | 2 |
| பயிர்ச்செய்கையைப் பதிவு செய்தல் | ..... | 2 |
| பயிரைப் பராமரித்தல் | ..... | 3 |
| கலப்புத் தாவரங்களை அடையளம் காணல் | ..... | 3 |
| உத்தியோகபூர்வமாக வயலைப் பரிசோதித்தல் | ..... | 5 |
| அறுவடையும், தயார் செய்தலும் | ..... | 5 |
| விதைகளைக் களஞ்சியப்படுத்தலும், பரிசோதித்தலும் | ..... | 7 |
| தரமான விதை நெல்லில் காணப்பட வேண்டிய சில முக்கிய இயல்புகள் | ..... | 8 |
| அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லிற்கான விவசாயத் திணைக்களத்தின் நியமங்கள் | ..... | 8 |
| அலுவலர்களின் முகவரியும், தொலைபேசி இலக்கமும் | ..... | 8 |
| சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களின் முக்கிய இயல்புகள் | ..... | 10 |

# அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தி

விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஒப்பந்தக் கமக்காரர்கள், விவசாயச் சங்கங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தனியார் விதை உற்பத்திக் கம்பனிகள், தனிப்பட்ட விவசாயிகள் ஆகியோரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதற்கு விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையினரின் மூலம் அவசியமான ஆலோசனைகளும், சேவைகளும் வழங்கப்படுகின்றன.

தரமான விதை நெல்லிற்கு எப்போதும் அதிக கிராக்கி நிலவுகின்றது. எனவே உங்களால் தரமான விதை நெல்லை உற்பத்தி செய்ய முடியுமாயின் எப்போதும் கூடிய இலாபத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

பொதுவான நுகர்விற்கென நெல்லை உற்பத்தி செய்வதை விட, விதை நெல்லை உற்பத்தி செய்வதால் விவசாயிகளுக்குப் பல நன்மைகள் உள்ளன.

- ஆரோக்கியமான, வீரியமான, வளமான பயிர்ச்செய்கைக்கு மிக முக்கியமான, தரமான அடிப்படை விதை நெல்லைப் பயன்படுத்த சந்தர்ப்பம் கிடைத்தல்.
- அரசாங்க நிறுவனங்களினால் அதிகளவான உதவிகளும், தொழில்நுட்ப ஆலோசனைகள் உட்பட ஏனைய வசதிகளும் கிடைத்தல்.
- முன்னோடியான, பதிவு செய்யப்பட்ட விதைநெல் உற்பத்தியாளராக அப்பிரதேச மக்களால் மதிக்கப்படல்.
- அதிக இலாபத்தைப் பெறக் கூடியதாய் இருத்தல்.

## அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தியில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள்

### ■ வர்க்கத்தைத் தெரிவு செய்தல்

பயிர்செய்யப்படும் பிரதேசத்திற்கு உகந்த, போகத்திற்கும், மண் இயல்புகளுக்கும் ஏற்ப, பிரதேசத்தில் பரவலாகக் காணப்படும் நோய், பீடைகளைத் தாங்கி வளரக்கூடிய வர்க்கத்தை (அட்டவணை 1) பயிரிட தெரிவு செய்யவும். அதிக விளைச்சலைப் பெற இது ஒரு அடிப்படைத் தேவையாகும்.

தரமான இயல்புகளைக் கொண்ட அடிப்படை விதை நெல்லாகப் பதிவு செய்யப்பட்ட வகுப்பைச் சேர்ந்த விதை நெல்லைப் பயன்படுத்தி பயிர்ச் செய்கையை ஆரம்பிக்கவும்.

உங்களின் விதை நெல் உற்பத்தியை தெரிவு செய்யபபட்ட ஒரு பிரதேசத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தவும். இதனால் இரு வர்க்கங்கள் கலப்பதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

### ■ பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்தல்

விதை நெல் உற்பத்திற்கென தெரிவு செய்யப்படும் வயல் இலகுவில் நீர் முகாமைத்துவம் செய்யக் கூடியதாகவும், வளமான மண்ணைக் கொண்ட, நிழல் இல்லாத இல்லாத, நன்கு சூரிய வெளிச்சம் விழுகின்ற இடமாக இருத்தல் வேண்டும்.

நீர்ப்பாசன வசதியுள்ள உலர், இடை வலயங்களைச் சேர்ந்த பிரதேசங்கள் விதை நெல் உற்பத்திக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

■ பயிர்ச்செய்கையை ஆரம்பித்தல்

நீங்கள் செய்கைபண்ண விரும்பும் நெல் வர்க்கத்தின் வயதை முதலில் கருத்திற் கொள்ள வேண்டும். அதனை உலர் காலத்தில் அறுவடை செய்யத்தக்கவாறு மிகவும் உகந்த நேரத்தில் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க வேண்டும்.




பின்வரும் கால எல்லையில் அறுவடை செய்யத்தக்கவாறு பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பது மிகவும் உகந்தது.

| போகம் | அறுவடை செய்ய வேண்டிய கால எல்லை |
| --- | --- |
| பெரும்போகம் | பெப்ரவரி 15–மார்ச்சு 15 |
| சிறுபோகம் | ஆகஸ்ட் 15–செப்ரெம்பர் 15 |

வயலைச் சிறப்பாக ஆயத்தம் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த போகங்களில் விழுந்த நெல் மணிகள், களை விதைகள் என்பனவற்றை அழிப்பதற்கு வசதியாக போதிய கால இடைவெளியில் நிலத்தைப் பண்படுத்த வேண்டும். இதனால் களையை கட்டுப்படுத்துவது இலகுவாக இருக்கும்.

இயலுமான வரை வரிசையில் நட முயற்சி செய்யவும்.

இடைவெளியை நிரப்ப அல்லது மீண்டும் விதைப்பதற்கு விதை நெல் தேவைப்படுமாயின் முன்னர் பயன்படுத்திய இருப்பிலிருந்தே விதை நெல்லைப் பயன்படுத்தவும்.

■ பயிர்ச்செய்கையைப் பதிவு செய்தல்

விதை நெல் மூடையில் உள்ள லேபள், விதையை விலைக்கு வாங்கிய பற்றுச்சீட்டு என்பனவற்றைக் கவனமாக வைத்திருக்கவும். விதை நெற் பண்ணைகளைப் பதிவு செய்யும் போது இவற்றைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

பயிர்ச்செய்கையை ஆரம்பித்த 2 வார காலத்தினுள் பயிர் செய்த திகதியையும், இடத்தையும் உங்கள் பிரதேசத்தில் உள்ள விதை அத்தாட்சிப் படுத்தும் சேவையினரின் (வி.அ.சே) பிராந்திய அலுவலத்திற்கு அறிவிக்கவும்.

உங்கள் பயிரைப் பதிவு செய்வதற்கும், பரிசோதிக்கவும் வருகை தரும் உங்கள் பிராந்திய வி.அ.சே. அலுவலருக்கு விதை லேபளையும், தேவையான ஏனைய விபரங்களையும் வழங்கவும். அவர் வயலைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் பத்திரத்தில் உங்களது கையொப்பத்தைப்

பெற்றுக்கொள்வார்.

■ பயிரைப் பராமரித்தல்



விவசாயத் திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்பட்ட, பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை எப்போதும் பின்பற்றவும்.



பயிர்கள் 14–21 நாட்களை அடைந்ததும் அதில் களைகள் கணப்படுமாயின் பிடுங்கி அழித்து விடவும். வயலைப் போன்றே வரம்பிலும் களை இல்லாது பராமரிப்பது முக்கியமானதாகும்.

சிபாரிசு செய்யப்பட்டவாறு தேவையான இரசாயனப் பசளைகளை, சிபாரிசு செய்யப்பட்ட அளவு, சரியான நேரத்தில் பயிருக்கு இடவும். இதைத் தவிர எப்போதும் சேதனப்பசளைகளையும் வயலுக்கு இடவும்.


நோய்களையும், பீடைகளையும் கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ முறைகளைக் கடைப்பிடிக்கவும்.

■ கலப்புத் தாவரங்களை அடையாளம் காணல்

பயிரின் ஆரம்பத்திலும், குடலைப் பருவத்தின் பின்னரும் காலத்திற்கு காலம் வயலை அவதானித்து, செய்கைபண்ணப்பட்ட வர்க்கத்தின் இயல்புகளைக் கொண்டிராத தாவரங்களைப் பிடுங்கி அகற்றவும்.

பயிரின் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு அகற்ற வேண்டிய தாவரங்களை பின்வரும் இயல்புகளின் மூலம் இலகுவாக அடையாளம் காண முடியும்.

தாவரத்தின் உயரம்





செய்கைபண்ணப்பட்ட வர்க்கத்தின் நெற் தாவரத்தை விட உயரமான அல்லது கட்டையான தாவரத்தைப் பிடுங்கி அகற்றவும்.

தண்டின் நிறம்

செய்கைபண்ணப்பட்ட வர்க்க நெற் தாவரத்தண்டின் நிறத்தை விட வேறு


நிறங்களைக் கொண்ட தாவரங்களைப் பிடுங்கி அழிக்கவும். சம்பா வர்க்கத்தின் தண்டு ஊதா நிறமாக இருப்பதோடு பெரும்பாலான ஏனைய வர்க்கங்களின் தண்டு பச்சை நிறமாக இருக்கும்.

இலைகளின் இயல்புகள்





நெல் இலைகளின் பருமன், நிறம், இலை உருவாகியுள்ள கோணம் என்பன வர்க்கங்களுக்கு ஏற்ப வேறுபடும். இலைகளில் காணப்படும் மயிர்களுக்கு ஏற்ப அதன் கரடுமுரடான தன்மை வேறுபடலாம்.

பூத்தலில் வேறுபாடு





செய்கைபண்ணப்பட்டுள்ள வர்க்கத்தை விட முந்தி அல்லது பிந்தி பூக்கும் தாவரங்களையே இது குறிப்பிடுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் வேறு நெல் வர்க்கங்களை இலகுவாக அடையாளம் காண முடியும்.

கதிர்களிலுள்ள நெல் மணிகளின் இயல்புகள்



நெல் மணியின் வடிவம், நிறம், பருமன், மேற்கூர் இருத்தல் அல்லது இல்லாதிருத்தல் ஆகிய இயல்புகள் வர்க்கங்களுக்கிடையே வேறுபட்டுக் காணப்படும். எனவே இவற்றைக் கொண்டு கலந்துள்ள நெல் வர்க்கங்களை அடையாளம் காண முடியும்.

அரிசியின் நிறம்




செய்கைபண்ணப்பட்டிருக்கும் நெல் வர்க்கத்தின் அரிசியின் நிறம் வெள்ளையா அல்லது சிவப்பா என்பதை அறிந்து தேவையற்ற தாவரங்களைப் பிடுங்கி அழிக்கலாம். இதனை அறிந்து கொள்வதற்காக பயிர் முதிர்ந்த பின்பு, ஒரு சில இடங்களில் நெல் மணிகளைப் பிடுங்கி, அவற்றில் உமியை அகற்றி அரிசியின் நிறத்தை

அறிந்து கொள்ள முடியும்.

விதை நெல்லை உற்பத்தி செய்யும் போது பயிரிடப்பட்டுள்ள வர்க்கம் தவிர்ந்த ஏனைய வர்க்கங்களைச் சேர்ந்த தாவரங்களை வயலிலிருந்து அகற்றுவது மிக முக்கியமானது.


■ உத்தியோகபூர்வமாக வயலைப் பரிசோதித்தல்

அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தி செய்யப்படும் வயலை குறைந்தது இரு தடவைகளாவது விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் பரிசோதிக்க வேண்டும். இங்கு கலப்பு நெல் வர்க்கங்கள், களைகள், பயரின் வளர்ச்சி என்பனவற்றிலேயே முக்கிய கவனம் செலுத்தப்படும்.



இறுதி வயற் பரிசோதனையை மேற்கொள்வதற்கு வசதியாக அறுவடை செய்வதற்கு 2 கிழமைகளுக்கு முன் விதை அத்தாட்சிப்படுத்தும்சேவையினருக்கு அறிவிக்கவும். வயற் பரிசோதனையின் பின் அது தொடர்பான அறிக்கையை அந்த அலுவலர் உங்களுக்கு வழங்குவார். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுகளைப் பின்பற்ற வேண்டும்.

■ அறுவடை செய்தலும், தயார் செய்தலும்




பயிரில் கதிர்களிலுள்ள மணிகளில் 85% ஆனவை முதிர்ச்சியடைந்த பின்னர் அறுவடை செய்யவும். அறுவடைக்கு உகந்த நேரத்தை இலைகளின் நிறத்தைக் கொண்டு தீர்மானிக்காமல், நெல் மணிகளின் முதிர்ச்சியைக் கொண்டு தீர்மானிக்கவும்.

இந்த அளவில் முதிர்ச்சியடைந்த நெல்லை அறுவடை செய்யாது பிற்போடுவது உகந்ததல்ல. இவ்வாறு பிந்துவதால், நெல் மணிகளுக்கு பல்வேறு வகையான சேதம் ஏற்படலாம்.






உலர்காலநிலை நிலவுமாயின் வெட்டிய பயிரை 2-3 நாட்களுக்கு வயலிலேயே

காயவிடவும்.

சூடடிப்பதற்கு முன்பு சூடடிக்கும் இடத்தை நன்கு சுத்தப்படுத்திக் கொள்ளவும்.

இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் சாக்குப் படங்களின் மேல் அல்லது வேறு ஏதாவது விரிப்பின் மேல் சூடடிக்க வேண்டும்.

நான்கு சக்கர உழவு இயந்திரத்தால் சூடடிக்கும் போது அதிகளவான மணிகள் உடைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. மாடுகள் அல்லது சூடடிக்கும் இயந்திரத்தின் மூலம் சூடடிப்பதற்கே சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.



சூடடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் அல்லது உபகரணங்களின் மூலம் வர்க்கங்கள் கலப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே இவ்வியந்திரங்களை நன்கு சுத்தப்படுத்திய பின்னரே சூடடிக்கப் பயன்படுத்த வேண்டும்.

சூடடித்த பின் சுளகினால் புடைத்தல், காற்றால் தூற்றல், அல்லது வேறு பொருத்தமான முறையால் சப்பிகளையும், வேறு பொருட்களையும் அகற்றவும்.

சதுரமான துளைகளைக் கொண்ட சல்லடையைப் பயன்படுத்தி களை விதைகளையும்,



வேறு பொருட்களையும் அகற்றவும். இதற்கு 1 அங்குலத்தில் 8 துளைகள் கொண்ட சல்லடையைப் பயன்படுத்தவும்



வயலைச் சுத்தமாக வைத்திருத்தல், மேற்குறிப்பிட்டவாறு விதைகளை வேறாக்கல், சப்பி, வேறு பொருட்களை அகற்றல் என்பனவற்றின் மூலம் வி.அ.சே தர நியமங்களுக்கு ஏற்ப இலகுவாக விதை நெல்லை உற்பத்தி செய்ய முடியும். அதிகளவான களை விதைகள், அல்லது வேறு பொருட்கள் காணபபட்டால் அவற்றை விதை அத்தாட்சிப்படுத்தல் தர நியமங்களுக்கு இசைவாக இருப்பதற்காக தற்காக அத்தொகையை இயந்திரங்களின் மூலம் சுத்தம் செய்ய வேண்டும்.

சுத்தம் செய்யப்பட்ட விதைநெல்லை இயலுமான வரை விரைவாக வெயிலில் நன்கு காய வைக்கவும். இதன் மூலம் நெல்லின் ஈரப்பதனை 13% ஐ விடக் குறைக்கலாம்.

காய விடும் போது வெறுந்தரையில் நெல்லைப் பரப்பாது சுத்தமான படங்கு அல்லது "கன்வஸ்" துணி மீது நெல்லைப் பரப்பி உலர விடவும். விதைகள் வெடிக்காதவாறு சரியான அளவிற்கு உலர்த்த வேண்டும். விதைகள் ஒரே அளவில்

உலர்வதற்கு வசதியாக அவற்றை அடிக்கடி கலந்து விடல் வேண்டும்.



காய வைத்த நெல்லை நிழலில் வைத்து, சூடு ஆறிய பின்னர், சுத்தமான சாக்குகளில் கட்டி வைக்க வேண்டும்.

சாக்குகளில் கட்டி வைத்த விதைகளை, குளிரான நிலைமையின் கீழ் சிறந்த காற்றோட்டமுள்ள இடத்தில் மரத்தட்டுகளின் மேல் தனி வரிசைகளில் (சாக்கின் வாய் முற்பக்கம் இருக்கத்தக்கவாறு) சேமித்து வைக்கவும். இதன் மூலம் விதைகளின் முளைதிறனை நீண்ட காலம் பாதுகாக்க முடியும். உலர்ந்த விதைகளை பூச்சிகள் மிகக் குறைவாகவே தாக்கும்.



சேமித்து வைக்கப்பட்டுள்ள விதை நெல்லை அடிக்கடி பரிசோதித்துப் பாருங்கள். விதைகளை, விதை துளைப்பான் போன்ற பூச்சிகள் சேதப்படுத்தியிருந்தால் அல்லது விதைகளில் நீரின் அளவு அதிகரித்தல் போன்ற விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டிருந்தால், சுத்தப்படுத்திக் கொள்ளலாம் அல்லது பூச்சிநாசினிகளை விசிறலாம்.

- விதைகளைக் களஞ்சியப் படுத்தலும், பரிசோதித்தலும்


விதைகள் நிரப்பிய சாக்குகளை வரிசைகளாக அடுக்கிய பின், பரிசோதனைக்கென விதை மாதிரியைப் (சாம்பள்) பெறுவதற்காக வி.அ.சே அலுவலர்களுக்கு அறிவிக்கவும். மாதிரியைப் பெறுவதற்கு முன் இருப்பில் உள்ள விதை நெல்லிற்கான கொண்டு செல்லும் லேபிளை வி.அ.சே அலுவலர் இடுவார். பெறப்பட்ட மாதிரி, விதை ஆய்வு கூடங்களுக்கு அனுப்பப்பட்டு, அவ்விதைப் பரிசோதனை முடிவுகள் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.


அறுவடை செய்ய முன் அல்லது காயவைக்கும் போது ஏதாவது காரணத்தினால் பனி, மழை போன்றவற்றால் விதைநெல் பாதிக்கப்படுமாயின், விதைகளில் ஒரு பகுதியின் ஈரப்பதன் அதிகரிப்பதற்கு சந்தர்ப்பம் உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் விதைகளைப் பல பகுதிகளாகப் பிரித்து, தனித்தனியாகச் சேமித்து வைக்கவும். இதனால் முழுத்தொகையும் நிராகரிக்கப்படுவதைக் குறைத்துக் கொள்ள முடியும்.

வி.அ.சே இன் பரிசோதனைகளின் பின் அனுமதிக்கப்பட்ட அதாவது அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லாகப் பயன்படுத்துவதற்கு

உகந்தவை எனத் தீர்மானிக்கப்பட்ட விதைத்தொகைக்கு விதை லேபிள் வழங்கப்படும்.

தற்போது அதிக அளவில் பயன்படுத்தப்படும் அத்தாட்சிப்படுத்திய விதை லேபிள்




எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட உள்ள லேபிள்

தரமான விதைநெல்லில் காணப்பட வேண்டிய சில முக்கிய இயல்புகளாவன:

- முளைதிறன் மிக அதிகமானதாக இருக்கும்
- வேறு வர்க்கங்களின் விதை நெல் கலந்திராது
- வேறு பொருட்கள், களை விதைகள், பாதிக்கப்பட்ட விதைகள், சப்பிகள் குறைவாகவே காணப்படும்.

அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லிற்கான விவசாயத் திணைக்களத்தின் நியமங்கள்

| இயல்பு | நியமங்கள் |
|---|---|
| 1. முளை திறன் ஆகக் குறைந்தது | 85% |
| 2. விதைகளில் உள்ள நீரின் அளவு; ஆகக் கூடியது | 13% |
| 3. 500 கிராம் விதை நெல்லில் இருக்கக் கூடிய வேறு நெல் வர்க்க விதைகளின் எண்ணிக்கை ஆகக் கூடியது | 100 |
| 4. 500 கிராம் விதை நெல்லில் இருக்கக்கூடிய களை விதைகளின் எண்ணிக்கை ஆகக் கூடியது | 05 |
| 5. 500 கிராம் விதை நெல்லில்இருக்கக் கூடிய சேதமடைந்த விதைக்களின் எண்ணிக்கை ஆகக்கூடியது | 200 |

விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையின் பிராந்திய அலுவலகங்களின் முகவரியும், தொலைபேசி இலக்கமும்

1. பொறுப்பதிகாரி
   விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய அலுவலகம். அரச பண்ணை
   கந்தளாய்
   தொ.இல. 026-34116

2. பொறுப்பதிகாரி
   விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய அலுவலகம்
   அரச பண்ணை
   பொலன்னறுவை
   தொ.இல. 027-22119

3. பொறுப்பதிகாரி
   விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய அலுவலகம், அரச பண்ணை
   ஹிங்குரன்கொட
   தொ.இல. 027-46319

4. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய
அலுவலகம், அரச பண்ணை
பெல்வெஹரை, தம்புள்ளை
தொ.இல. 025-84766

5. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய
அலுவலகம்
உதவி விவசாயப் பணிப்பாளர்
(விதை, நடுகைப்பொருட்கள்)
அலுவலகம், வவுனியா
தொ.இல. 024-2223

6. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய
அலுவலகம், நிக்கவெரட்டிய
தொ.இல. 037-60309

7. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய
அலுவலகம்,
12 ஏ, மாக்கஸ் பொன்னான்டோ
மாவத்தை, கொழும்பு-7
தொ.இல. 01-694547

8. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய
அலுவலகம், மகா இலுப்பள்ளமை
தொ.இல. 025-49135

9. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய
அலுவலகம், அரச பண்ணை
பட்ட அத்த, தொ.இல. 047-26039

10. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய
அலுவலகம், அரச பண்ணை
மல்வத்தை, அம்பாறை
தொ.இல. 063-22457

11. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய
அலுவலகம், அரச பண்ணை
அழுத்தறம, தொ.இல. 055-57019

12. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய
அலுவலகம், அரச பண்ணை
பிபிலை, தொ.இல. 055-65425

13. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய
அலுவலகம், அரச பண்ணை
குண்டசாலை, தொ.இல. 08-232471

14. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்திய
அலுவலகம், நிகில்லகஸ்கட
தொ.இல. 08-365342

15. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்தி
அலுவலகம், சீத்தா எலிய, நுவரெலியா
தொ.இல. 052-22865

16. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்தி
அலுவலகம், அரச பண்ணை
கரடியனாறு, தொ.இல. 065-23615

17. பொறுப்பதிகாரி
விதை அத்தாட்சிப்படுத்தும் பிராந்தி
அலுவலகம், பென்தோட்டை
தொ.இல. 034-75173

தலைமைக் காரியாலயம்
விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை
த.பெ.இல.3
கண்ணொறுவை
பேராதனை
தொ.எ. 08-388217/ 388421

**தரமான விதைநெல்லை உற்பத்தி செய்து அதிக விளைச்சலைப்பெற்று இலாபம் பெறுங்கள்**

அட்டவணை 1: சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களின் முக்கிய இயல்புகள்

| வர்க்கம் | அரிசியின் நிறம் | விளைச்சல் புசல்/ ஏக்கர் | விசேட இயல்புகள் |
|---|---|---|---|
| 3 மாதம் | | | |
| பிடப்ளியு.272-6 பி | சிவப்பு | 50-60 | சம்பா அரிசி, குறைந்த நீர்வடிப்பு, இரும்பு நச்சுத்தன்மையைத் தாங்கி வளரும் |
| பிஜீ 300 | வெள்ளை | 100-120 | உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| பிஜீ 301 | சிவப்பு | 100 | மானாவாரிச் செய்கைக்கு |
| பிடப்ளியு 302 | வெள்ளை | 100 | அமில. உப்பு மண்ணிற்கு |
| ஏரி 303 | சிவப்பு | 100-120 | உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| பிஜீ 304 | வெள்ளை | 100-120 | உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| 3 1/2 மாதம் | | | |
| பிஜீ 94-1 | வெள்ளை | 150 | உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| பிடப்ளியு 267-3 | வெள்ளை | 70-80 | இரும்பு நச்சுத்தன்மையை நன்கு தாங்கி வளரும் |
| பிஜீ 350 | சிவப்பு | 150 | உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| பிடப்ளியு 351 | சிவப்பு | 150 | இரும்பு நச்சுத்தன்மையுள்ள வயலுக்கு உகந்சது |
| பிஜீ 352 | வெள்ளை | 140 | உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| ஏரி 353 | சிவப்பு | 120 | அமில மண்ணிற்கு |
| ஏரி 354 | வெள்ளை | 140 | சவர்த்தன்மையுள்ள வயலுக்கு |
| எல்டீ 355 | வெள்ளை | 100 | சம்பா இரும்பு நச்சுத்தன்மைய ஓரளவு தாங்கும் |
| எல்டீ 356 | சிவப்பு | 100 | சம்பா இரும்பு நச்சுத்தன்மைய ஓரளவு தாங்கும் |
| பிஜீ 357 | வெள்ளை | 160 | உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| 4 மாதம் | | | |
| பிஜீ 379-2 | வெள்ளை | 140-150 | உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| பிஜீ 380 | வெள்ளை | 150 | உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| பிடப்ளியு 400 | சிவப்பு | 80 | ஈர வலய உப்புத்தரைக்கு |
| ஏரி 401 | சிவப்பு | 80-100 | உப்புத்தன்மையான வயலுக்கு |
| ஏரி 402 | சிவப்பு | 150 | உலர் வலயத்திற்க மிக உகந்தது |
| பிஜீ 403 | வெள்ளை | 150 | உலர் வலயத்திற்க மிக உகந்தது |
| பிஜீ 405 | வெள்ளை | 80 | மணமுள்ளது. உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| 4 1/2 மாதம் | | | |
| பிஜீ 400-1 | வெள்ளை | 140-150 | உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| பிஜீ 450 | வெள்ளை | 140 | உலர் வலயத்திற்கு மிக உகந்தது |
| பிடப்ளியு 451 | வெள்ளை | 100 | ஈர வயல உப்புத்தரைக்கு |
| பிடப்ளியு 452 | சிவப்பு | 80 | ஈர வலய, இரும்பு நச்சுத்தன்மையுள்ள வயலுக்கு |
| பிடப்ளியு 453 | சிவப்பு | 120 | ஈர வலய. இரும்பு நச்சுத்தன்மையுள்ள வயலுக்கு |
| 5-6 மாதம் | | | |
| பிஜீ 3.5 | வெள்ளை | 100 | பள்ள நாட்டு ஈரவலய பெருநெல் செய்கைப் பகுதிக்கு |
| பிஜீ 407 | வெள்ளை | 120 | பள்ள நாட்டு ஈரவலய பெருநெல் செய்கைப் பகுதிக்கு |
| பிஜீ 745 | வெள்ளை | 120 | ஈர வலய பெருநெல் செய்கைப் பகுதிக்கு |
| பிஜீ 38 | வெள்ளை | 120 | ஈர வலய பெருநெல் செய்கைப் பகுதிக்கு |

விவசாயத் திணைக்களம்
பேராதனை
[redacted]

அச்சுப்பதிப்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்